# மதுரை மாநகராட்சி
# மாண்புமிகு மேயர் தலைமையில் நடத்தப்படும்
# மாமன்ற கூட்டத்தின் கூட்டத்தீர்மானங்கள்
# 29.11.2022-ந் தேதி நேரம்: காலை: 10.30 மணி

**1. H2/014071/2021**

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலம் 100 வார்டுகளிலும் பொது சுகாதாரப் பணி தற்பொழுது வெளிக்கொணர்வு முறையில் 1 முதல் 14 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்ததாரர் மூலமாக 2229 தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு வேலை உத்தரவு காலம் 25.11.2022ல் முடிவடைய உள்ளது.

அரசாணை எண் : 116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 24.08.2022 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித எண் ROC No: 24608/2022/EA2, நாள்: 21.10.2022 மற்றும் 11.11.2022 படி மாநில அளவில் வழிகாட்டுதல்கள வழங்கப்பட்டுள்ளது. இதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி பெற்று புதிய வழிகாட்டுதல் படி ஒப்பந்த நடவடிக்கை முடியும் வரை, மேற்கண்ட 14 சிப்பங்களுக்கு கால நீட்டிப்பு அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 125**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**2. உ2/ம.எண் 005336/22**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 வார்டுப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள், திரவக்கழிவு மேலாண்மை பணிகள், மற்றும் பொறியியல் பிரிவு பணிகளை மேற்கொள்ளும் வாகனங்களுக்கு தேவையான புதிய டயர்கள் பொதுநிதியின் கீழ் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளி வரவழைக்கப்பட்டது.

| வ.எண் | கோப்பு எண் | வேலையின் விபரம் | மதிப்பிட்டு தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | உ2/ம.எண் 005336/22 | Purchase of New Tyres for Madurai corporation Zone – 1 Vehicle Division. | 11,06,454/- |

கீழ்கண்ட 2 நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றது, விபரம் பின்வருமாறு.

1. M/s. MRF Limited, Maduari
2. M/s. JK Tyres & Industries LTD , Madurai.

மேற்கண்ட 2 நிறுவனங்களின் விலைப்புள்ளி திறந்து வகைப்படுத்தியதில். M/s. JK Tyres & Industries LTD , Madurai நிறுவனத்தார் ரூ.11,06,454/- க்கு (GST உட்பட ) கொடுத்துள்ளார். இத்தொகையானது மற்ற நிறுவனத்தார் விலையை காட்டிலும் குறைவாக உள்ளது. எனவே M/s. JK Tyres & Industries LTD , Madurai. நிறுவனத்தாரின் ரூ.11,06,454/- ஐ உத்தேச மதிப்பீடாக ஏற்று புதிய டயர் கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்க மாமன்றத்தின் ஒப்புதலையும் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 126**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**3.அ1/013369/2022**

அரசாணை (2டி) எண். 241 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பணிகள் அலகு, பணி–1 பிரிவு நாள்: 03.11.2022ன்படி திரு.து.காளிமுத்தன், அவர்களை அயற்பணியின் கீழ் மதுரை மாநகராட்சியில் உதவி ஆணையாளர்(வடக்கு) ஆக பணி நியமனம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. திரு.து.காளிமுத்தன், துணை ஆட்சியர்/உதவி ஆணையாளர் மதுரை மாநகராட்சியில் நிர்வாக நலன் கருதி உதவி ஆணையாளராக 04.11.2022–ல் பிற்பகல் பணியேற்பு செய்து மண்டலம்–1, (கிழக்கு) உதவி ஆணையாளர் பணியிடத்தில் 04.11.2022 முதல் பணிபுறிந்து வருகிறார் என்ற விபரத்தை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 127**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**4.ம.அ1/004761/2021**

தமிழ்நாடு மாநகராட்சி பணி விதிகள் 1996 பொறியியல் பணி விதிகள் நிலையின் கீழ் மதுரை மாநகராட்சி உதவிசெயற்பொறியாளர் பணியிடங்களை உதவிப்பொறியாளர் மற்றும் இளநிலைப்பொறியாளர்களைக் கொண்டு 3:1 என்ற விகிதாச்சாரத்தில் பதவி உயர்விற்கான தேர்ந்தோர் பட்டியல் வெளியிட மாமன்றத்தில் தீர்மான எண். 1324 நாள்: 24.02.2022-ன் படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும் பட்டியலில் உள்ள உதவிப்பொறியாளர்களுக்கு உதவிப்பொறியாளராக பணியமர்த்தப்பட்டமைக்கு அரசாணை எண்.135 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 28.04.2022 அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **பெயர்** | **தற்போதைய பதவி** | **இளநிலை/உதவிப் பொறியாளர் பணிமூப்பு 2021-2022 பட்டியலின் வரிசை எண்** |
|---|---|---|---|
| 1 | திரு.R.அலெக்ஸாண்டர் | உதவிப்பொறியாளர் | உதவிப்பொறியாளர் வரிசை எண். 1/2021-2022 |
| 2 | திருமதி.R.கனி | உதவிப்பொறியாளர் | உதவிப்பொறியாளர் வரிசை எண். 6/2021-2022 |
| 3 | திரு.F.அரோக்கியசேவியர் | உதவிப்பொறியாளர் | உதவிப்பொறியாளர் வரிசை எண். 8/2021-2022 |
| 4 | திருமதி.K.இந்திராதேவி | இளநிலைப்பொறியாளர் | இளநிலைப்பொறியாளர் வரிசை எண். 1/2021-2022 |
| 5 | திரு.K.மயிலேறிநாதன் | உதவிப்பொறியாளர் | உதவிப்பொறியாளர் வரிசை எண். 9/2021-2022 |
| 6 | திருமதி.A.ஜெயா | உதவிப்பொறியாளர் | உதவிப்பொறியாளர் வரிசை எண். 11/2021-2022 |
| 7 | செல்வி.K.சுபா | உதவிப்பொறியாளர் | உதவிப்பொறியாளர் வரிசை எண். 13/2021-2022 |
| 8 | திரு.S.பாபு | இளநிலைப்பொறியாளர் | இளநிலைப்பொறியாளர் வரிசை எண். 4/2021-2022 |

எனவே மேற்கண்ட இளநிலை/உதவிபொறியாளர்களுக்கான தோந்தோர் பட்டியல் வெளியிடப்பட்டதின் அடிப்படையிலும் அரசின் உறுதியாக்கம் கிடைக்க பெற்றதை தொடர்ந்து மேற்கண்ட இளநிலை/உதவி பொறியாளர்களுக்கு மதுரை மாநகராட்சி பொறியியல் பிரிவில் காலியாக உள்ள உதவிசெயற்பொறியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கிடவும் அதனை தொடர்ந்து காலிபணியிடம் ஏற்படும் பட்சத்தில் மீதமுள்ள உதவிபொறியாளர்களுக்கு

உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு:

1. திரு.M.முனீர் அகமது, உதவிப்பொறியாளர் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP(MD)13317 of 2022 W(MD).Nos.9455 & 9456 of 2022 இன்று தீர்ப்புரைக்கு உட்பட்டது.
2. திரு.S.குழந்தைவேலு உதவிப்பொறியாளர் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP(MD) 2236 of 2022 இறுதி தீர்ப்பரைக்கு உட்பட்டது.
3. திரு.M.பாலமுருகன் உதவிப்பொறியாளர் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP(MD) 3171 of 2022 இறுதி தீர்ப்பரைக்கு உட்பட்டது.
4. வ.எண்.4ல் உள்ள திருமதி.K.இந்திராதேவி இளநிலைப்பொறியாளரின் பணி மூப்பினை ஆட்சபேணை செய்து திருமதி.C.துர்காதேவி, இளநிலைப்பொறியாளரால் தொடரப்பட்ட வழக்கு எண். WMP(MD)No. 15651 of 2018, IN WP(MD)No. 17759 of 2018 தீர்ப்புரையில் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு பதவி உயர்வு பரிசீலினை செய்யப்படும்.

**கூட்டப்பொருள் ரத்து செய்யப்பட்டது.**

**5. ந.க.எண். ஒ4/017586/2021**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் **96** பள்ளிகளில் சுகாதார நலன் பேணும் பொருட்டும் நிர்வாக நலன் கருதியும், பள்ளி மாணாக்கர்களின் சுகாதார நலன் கருதியும் நடப்பு **2022–2023** கல்வியாண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண்.21787/2021/EA2 நாள் : **28.10.2021**ல் நிர்ணயம் செய்துள்ளவாறு ஏற்கனவே பணிபுரிந்து வந்த **120** தூய்மை பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.391/- மட்டும் ஊதியம் என்ற அடிப்படையில், **13.09.2022** முதல் **10.12.2022** வரை **89** நாட்களுக்கு மட்டும் கீழ்க்காணும் நிபந்தனைகளின்படி பணியமர்த்திக் கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகையான ரூ.41,75,880/-ஐ மாநகராட்சி கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

நிபந்தனைகள் :

1. இந்த பணியானது முற்றிலும் தற்காலிகமானது.
2. இந்த தற்காலிக பணியின் மூலம் வருங்காலங்களில் பணிநிரந்தரமோ, பணிமுன்னுரிமையோ வழங்கப்பட மாட்டாது.
3. முந்தைய பணிக்காலம் ஏதுமிருப்பின் பின் தொடர்ச்சி ஏதுமின்றி முந்தைய பணிக்காலம் இதன் மூலம் முற்றிலும் துணடிக்கப்படுகிறது.
4. இது முற்றிலும் புதிய தற்காலிக பணியமர்வாகும்.
5. இந்த தற்காலிக பணியின்படி **89** நாட்களுக்கு மட்டுமே பணிபுரிய அனுமதிக்கப்படுவர். **89** நாட்கள் முடிவுற்ற பின்னர் பின் தொடர்ச்சி ஏதுமின்றி பணிக்காலம் தானாகவே காலாவதியாகிவிடும்.
6. இந்த ஆணையின்படி பணியமர்த்தப்படுபவர்கள் எவ்வித முன்னறிவிப்பின்றியும், எந்த நேரத்திலும் மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்படுவர்.
7. முந்தைய பணிக்காலம் மற்றும் தற்போதைய பணிக்காலம் யாவும் பின்வரும் காலங்களில் தொடர் பணியாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.
8. பள்ளி வேலை நாட்களுக்கு மட்டும் ஊதியம் வழங்கப்படும்.
9. ஒரே நபரை தொடர்ந்து பணியமர்த்துக் கொள்ள வேண்டியதில்லை.
10. பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாதந்தோறும் கல்வி அலுவலரிடம் சமர்ப்பிக்கும் வருகைப் பதிவேட்டினை அடிப்படையாக கொண்டு அந்த மாதத்திற்கான ஊதியம் வழங்கப்படும்.

**மாமன்றத்தீர்மானம் எண்: 128**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**6. எ3/08460/2022**

சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் (Smart City) வார்டு எண். 31–ல் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான கடந்த 13.04.1962 முதல் இயங்கி வரும் 9.68 ஏக்கர் பரப்பளவு கொண்ட தமுக்கம் மைதானத்தில் ஏற்கனவே சேதமடைந்திருந்த கலையரங்க கட்டிடத்தினை அகற்றிவிட்டு, புதிதாக அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது. கட்டிட உபயோகம் தவிர இதர நிகழ்ச்சிகள் நடத்திக் கொள்ள சுமார் 7.18 ஏக்கர் காலியிடமாக விடப்பட்டுள்ளது.

இம்மையத்தில் சுமார் 3500 நபர்கள் பங்கு கொள்ளும் வகையில், சுமார் 10082 சதுர மீட்டர் பரப்பளவில் சுமார் 800 நபர்கள் அமரும் வகையில் உணவு அருந்தும் கூடம் மற்றும் சமையல் அறையுடன் 2 இடங்களில் நவீன கழிப்பறை வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. கூடுதலாக தேவைக்கேற்ப நிகழ்ச்சி நடத்தும் வகையில் நவீன நகரும் தடுப்பான்களுடன் நான்கு மற்றும் இரண்டு ஆக பிரித்தும் கொள்ளும் வகையில் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இம்மையத்தின் தரைதளத்தின்கீழ் சுமார் 240 எண்ணம் நான்கு சக்கர வாகனம் மற்றும் 215 எண்ணம் இரு சக்கர வாகனம் நிறுத்தம் செய்யும் வசதியுடன் சுமார் ரூ.47.72 கோடி மதிப்பீட்டு தொகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாநாட்டு மையத்தினை பொது மக்களின் பயன்பாட்டிற்கு தினசரி வாடகை அடிப்படையில் அரங்கம் முழுவதையும் அனுமதிப்பதற்கு தினசரி வாடகையாக ரூ.6,30,000/-, அரங்கம்–1–க்கு ரூ.52148/-, அரங்கம்–2–க்கு ரூ.52148/-, அரங்கம்–3–க்கு ரூ.205433/-, அரங்கம்–4–க்கு ரூ.205433/-, அரங்கம்–5–க்கு ரூ.56889/-, அரங்கம்–6–க்கு ரூ.48475/- (EB, Genset, Diesel Charges & GST தனியாக வசூலிக்கப்படும்) நிர்ணயம் செய்வதற்கும், தமுக்கம் மைதானத்தை மட்டும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிப்பதற்கு தினசரி வாடகையாக ரூ.1,00,000/- (EB Charges & GST தனியாக வசூலிக்கப்படும்) நிர்ணயம் செய்வதற்கும், மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 129**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**7. ஒ7/004720/2022**

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 மத்தியம் வார்டு 75ல் உள்ள சுந்தராஜபுரம் தொடக்கப்பள்ளிக்கு முன்னாள் தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் பெயரினையும் சுந்தராஜபுரம் மேல்நிலைப் பள்ளிக்கு முன்னாள் தமிழக சட்டமன்ற சபாநாயகர் பண்பாளர் திரு.P.T.R. பழனிவேல் ராஜன் அவர்களின் பெயரினை சூட்டவும் 25.04.2022 அன்று மாநகராட்சி கல்வி குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை ஏற்பு செய்து மேற்கண்ட பள்ளிகளுக்கு பெயர் சூட்ட அரசின் அனுமதி பெற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 130**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**இடம்: மதுரை**
**நாள்: 29.11.2022**

**(ஒம்..) திருமதி. வ.இந்திராணி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**